செய்தி வெளியீடு எண்: 646 நாள்:27.09.2019

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் **26.9.2019** அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக சென்னை, வில்லிவாக்கம் திட்டப்பகுதியில் சொந்த வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ‘‘பி’’, ‘‘சி’’ மற்றும் ‘‘டி’’ பிரிவு அரசு ஊழியர்களுக்காக சுயநிதி திட்டத்தின் கீழ் **71** கோடியே **71** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள **324** குறைந்த வருவாய் பிரிவு பன்னடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், சென்னை மாவட்டம் – இந்திரா நகர் மற்றும் இராமாபுரம், கிருஷ்ணகிரி மாவட்டம் – ஓசூர் புறநகர் திட்டப்பகுதி–**19** ஆகிய திட்டப் பகுதிகளில் **126** கோடியே **68** லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பன்னடுக்குமாடி குடியிருப்புகள், கடைகள் மற்றும் வீட்டுமனைகளை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் **15.9.2015** அன்று சட்டப்பேரவை விதி எண் **110**–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், அரசு அலுவலர்களுக்கு சொந்த வீடு கட்டும் திட்டத்தின் கீழ், அரசு அலுவலர்களுக்கு சென்னை வில்லிவாக்கத்தில் அடுக்குமாடி குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம், சென்னை, வில்லிவாக்கம் திட்டப்பகுதியில் சொந்த வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ‘‘பி’’, ‘‘சி’’ மற்றும் ‘‘டி’’ பிரிவு அரசு ஊழியர்களுக்காக சுயநிதி திட்டத்தின் கீழ் **1.47** ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டு படுக்கை அறை, கூடம், சமையலறை, படுக்கையறையுடன் இணைந்த கழிவறை மற்றும் குளியலறை, குடிநீர் மற்றும் கழிவுநீர் வசதிகள், சூரிய மின்சக்தி இணைப்பு, மின்தூக்கி, தீயணைப்பு வசதி, ஜெனரேட்டர், மின் இணைப்பு உள்ளிட்ட வசதிகளுடன் **71** கோடியே **71** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள **324** குறைந்த வருவாய் பிரிவு பன்னடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள். மேலும், இப்புதிய குடியிருப்பு திட்டப்

பகுதியில், குடிநீர் வசதிக்கான ஆழ்துளை கிணறு, கீழ்நிலை நீர் தேக்கத்தொட்டி, சாலை வசதிகள், மழை நீர் வடிகால் வசதிகள் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

சென்னை மாவட்டம், இந்திரா நகர் திட்டப்பகுதியில் 19 கோடியே 87 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 60 மத்திய வருவாய் பிரிவு பன்னடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் 9 கடைகள்; சென்னை மாவட்டம், இராமாபுரம் திட்டப்பகுதியில் 78 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 384 குறைந்த வருவாய் பிரிவு பன்னடுக்குமாடி குடியிருப்புகள்; கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் புறநகர் திட்டப் பகுதி–19ல் மனை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 28 கோடியே 37 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து உட்கட்டமைப்புகளுடன் கூடிய 214 வீட்டு மனைகள்;

என மொத்தம் 198 கோடியே 39 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பன்னடுக்குமாடி குடியிருப்புகள், கடைகள் மற்றும் வீட்டு மனைகள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி. ஜெயக்குமார், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் திரு.பி.கே. வைரமுத்து, தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. ஆனந்தராவ் விஷ்ணு பாட்டீல், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**